ஆனால், இது சிக்கனத் திட்டமாகாது என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்ததால், மேலும் முயற்சிகள் எதும் மேற்கொள்ளப் படவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், குறைந்த கட்டணமுடைய நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு நமது மாநிலத்திலே இல்லை. அதன் காரணமாக அண்டை மாநிலங்களிலேயிருந்து வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, சுற்றிலும இருக்கக்கூடிய கடல் தண்ணீரில் அந்த நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அளவிற்கு முயற்சி எடுத்தால் குறைந்த கட்டணமுடைய மின்சாரம் நமக்குக் கிடைக்கும் அல்லவா? அதில் ஓரளவுக்கு அதிகப்படியான செலவிருந்தாலும், வெளிநாட்டிலே இருக்கக்கூடிய நிபுணர்களுடைய உதவியைக் கொண்டாவது இதில் தீவிரமாக முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: பிரான்ஸ் நாட்டிலே அமல்படுத்தப் படுகிறது. முனபு மினசார அமைச்சராக இருந்த திரு வெங்கட்டராமன் அவர்கள் அங்கு சென்று அதற்கு வேண்டிய ஆதாரங்களை அறிந்து பரிசேசதனை செய்யச் சொல்லிப் ·ார்த்து, அதன் விளைவாக மிகுந்த நட்டம் வரும், அதனாலே அதை தமிழ்நாட்டிலே மேற்கொள்ள முடியாது என்று அத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் அவர்களே, கடல் அலை மூலமாக மின்சாரம எடுப்பது தாமதமானாலும் கூட அரசாங்கம் நடத்து கின்றவர்கள் தேர்தலுக்கு முன்பாக கடல் பாசியிலே அல்வா செய்து கொடுக்கப் போவதாக பேசி இருக்கிறார்கள். அதை விரைவில் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

(விடை இல்லை.)

திரு. ந. வீராசாமி: தலைவர் அவர்களே, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இப்படி கடல் அலை மூலம் மின்சாரம எடுப்பது கஷ்டம் என்றும் அப்படி மின்சாரம் தயாரிப்பதற்கு 150 அடிக்கு மேலே போகின்ற அலைகள் இருந்தால் தான் முடியும் என்றும் கூறி இருக் கிறார்கள். அப்படி உயர்ந்த அலைகள் நம்முடைய கடலில் இல்லாத காரணத்தினால் இது சாத்தியம் இல்லையென்று அரசாங்கம் கருது கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: மின்சாரம் தயாரிக்க வேண்டு மென்றால் 25 அடி உயரமான (tide variations) அலைகள் தேவை. ஆனால் நமது கடலலைகள் tide variations 4 அடியிலிருந்து 5 அடி உயரமே எழும்புகின்றனவாதலால் இங்கு கடல் அலையை கொண்டு மின்சாரம் தயாரிப்பதற்கு சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு.

THIRU K. VINAYAKAM: Sir, even though the tidal wave does not rise to the extent desirable, was this experiment tried in the Madras State and if so, what is the cost of a unit of electricity so produced and how does it compare with the present energy produced either through the hydel system or the thermal system?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: விவரம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

Disciplinary Proceedings

*111 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to drop the convention to consult the Madras Public Service Commission in cases of disciplinary proceedings in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) தமிழ் நாட்டு லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுதான் அறிவுரை கூறும் ஒழுங்கு முறை வழக்குகளில் தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகத்துடன் அரசாங்கம் ஆலோசிக்கத் தேவையில்லை எனவும், இதன் பொருட்டு தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழக ஒழுங்கு முறை விதிகள் தக்க வாறு திருத்தப்படலாமெனவும் கருத்துத் தெரிவித்துள்ளது.

(இ) இதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether the Government consider the opinion given by tht Madras Public Service Commission as binding on the Government or as a recommendatory one in arriving at a final conclusion in a given case?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அதைக் கட்டுப்படுத்துவது என்று கூற முடியாது. ஆகவே தான், அந்த யோசனையை அரசு ஆலோ சித்து வருகிறது என்று குறிப்பிட்டேன்.

Portrait of Sri Sankarachariar.

* 112 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether at the end of 1966, the portrait of His Holiness Sri Sankarachariar of Kanchi Kamakoti Peetam was exhibited in a disgraceful manner at the premises of a communal party office at Kumbakonam; and

(*b*) if so, whether the Government will take suitable steps to prevent such occurrences in future?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இது கும்பகோணத்திலே நடந்த ஒரு விஷயம். எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. சென்ற பொதுத் தேர்தலிலே பல கட்சிக்காரர்கள், முக்கியமான தலைவர்கள் எல்லாம் இம்மாதிரி சங்கராச்சாரியார் போன்ற ஒரு உருவத்தை வைத்து வகுப்புவாதக்காரர்கள் அதை அவமானப்படுத்திய வகையில் நடந்து கொண்டபோது, அதை பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொண்டார்கள். இம்மாதிரி இனி மனதைப் புண்படுத்தும்படியான மத சம்பந்தமான விஷயங்கள் நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த கேள்வி எழுப்பிய திரு. காசிராமன் அவர்களை ஆதரித்து அங்கு அப்பொழுது திராவிடக் கழகம் வேலை செய்த நேரத்தில் இப்படி அவர்களுடைய கட்சி அலுவல கத்திற்கு முன்பாக சங்கராச்சாரியார் அவர்களுடைய படம் அவமானமாக வைக்கப்பட்டதாக போலீசுக்குத் தகவல் வந்தது. போலீஸார் சென்று பார்த்த நேரத்தில் அந்தப் படம் அங்கு இல்லை யென்று தகவல் அளித்தார்கள்.

DR. H. V. HANDE : Sir, are the Government aware that the Christians view Jesus with great veneration and the Muslims regard Prophet with great respect and large sections of the Hindu community consider Sankaracharya and Ahobila Mutt Jeer with great respect and veneration? Nowadays it has become